இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் **2017/ 2018**
**EPD3530/ESD1230** – பிள்ளை விருத்தி
இறுதிப்பரீட்சை - மட்டம் 03
03 மணித்தியாலங்கள்

---

காலம் : மு.ப 9.30 – பி.ப 12.30 திகதி : 23.02.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

1. பிள்ளை விருத்தியின் ஐந்து (05) நிலைமைகளை ரூசோ விளக்கியுள்ளார். அந்த ஐந்து (05) நிலைகளையும் பெயரிடுக.

2. பியாஜேயின் அறிவாற்றல் விருத்தி கொள்கையின்படி "தழுவல் செயன்முறை" பற்றி விளக்குக.

3. பெற்றோரியலின் மூன்று (03) வகைகளைப் பெயரிட்டு அவற்றின் முக்கிய இயல்புகளையும் பெயரிடுக.

4. "முதிர்ச்சிக்கும் "கற்றலுக்கும்" இடையிலான தொடர்பை உதாரணங்கள் தந்து விளக்குக.

5. "தனிநபர்கட்கிடையிலான நுண்ணறிவு" என்றால் என்ன என்பதை விளக்குக.

6. "அண்மை விருத்தி வலயம்" என்பதை விபரித்த கல்வியலாளரைப் பெயரிடுக.. "அண்மை விருத்தி வலயம்" என்றால் என்ன என்பதை விளக்குக.

7. பிள்ளைகளில் காணப்படும் "சுய எண்ணக்கரு" விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் இரண்டு (02) காரணிகளைப் பெயரிட்டு அவற்றில் ஏதாவது ஒன்று பற்றி விளக்கவும்.

8. உங்கள் சொற்களில் "ஞாபகம்" என்றால் என்ன என்பதன் கருத்தை விளக்குக. "புலனியக்க ஞாபகம்" என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(5×8= 40 புள்ளிகள்)

## பகுதி II

9. (i) "கவனம்" தொடர்பான ஐந்து (05) வடிவங்களைப் பெயரிடுக.
(05 புள்ளிகள்)

(ii) பொருத்தமான உதாரணங்கள் தருவதன் மூலம் நீங்கள் மேற்குறிப்பிட்ட கவனம் பற்றிய வடிவங்களில் ஒன்றை (01) விளக்குக.
(07 புள்ளிகள்)

(iii) கவனத்தை விருத்தி செய்வதற்கு இளம் பிள்ளைகளின் பொருட்டு ஆசிரியரால் செய்யக்கூடிய இரண்டு (02) செயற்பாடுகளை விளக்குக
(08 புள்ளிகள்)

10. (i) மொழி விருத்தியின் "நடத்தை வாதிகளின் நோக்கு" பற்றி விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு மொழி கற்பிக்க நடத்தை வாதிகளின் நோக்கு பயன்படுத்த முடியும் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

11. (i) ஹொவேட் கார்டினரின் பன்முக நுண்ணறிவுக் கொள்கைக்கமைய "நுண்ணறிவு" என்பதை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) ஆரம்பக்கல்வி மாணவரின் கற்றலை விருத்தி செய்யும்போது இக்கொள்கை எவ்வாறு பயன்படும் என்பதை உதாரணங்கள் தந்து விளக்குக.
(10 புள்ளிகள்)

12. (i) பியாஜேயின் அறிவாற்றல் விருத்தி கொள்கையின்படி பிள்ளைகளின் சிந்தனைகள் பற்றிய நான்கு (04) நிலைகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) தூல சிந்தனைப் பருவத்தினூடு செல்லும் பிள்ளைகளின் (7-11 வருடங்கள்) இயல்புகளை பொருத்தமான உதாரணங்களுடன் முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

13. (i) பவுமின்ட் (Baumind) இனால் வகையிடப்பட்ட மூன்று (03) பெற்றோரியல் முறைகளைச் சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

(ii) பிள்ளைகளின் நடத்தைகள் பெற்றோரியல் முறைகளால் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றதென்பதை உதாரணங்களுடன் விளக்குக.
(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*